# சிலப்பதிகாரம் சாற்றும் பெண்களின் இல்லறக் கடமைகள் ஒரு பார்வை

**பார்வதி வெள்ளைச்சாமி**[1]
Parvathi Vellachamy[1]

**Abstract**

The paper of this article is to show that family is social institution that plays a role as an agent of correctional and character building of an individual. Father as the head of a family should give and impart moral education. At the same time, mother also plays an important role by showing tolerance to her husband in order to preserve the dignity of the family and encouraging the family members to achieve success. Regardless of their status, women must perform traditional role as a wife to her husband and as a mother to their children. The one Silappathikaram has proved that the responsibility of a woman is not only administering the family matter but also showing a wife's faithfulness to her husband. Besides, she also has to give a proper spiritual education to her children in order to make them a sound personality. Finally, a woman has to uphold the family tradition which is inherited. This is because by adhering to this tradition it will unite and foster a closer relationship among the family members and it can be maintained and everlasting.

*Keywords : Family, Silappathikaram, women, responsibility, happy family.*

**முன்னுரை**

குடும்பம் எனப்படுவது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மணம்புரிந்து அன்புநெறியில் இன்புற்று வாழ்வதாகும். இல்லறம் சிறந்து இயங்குவதற்குக் குடும்பத் தலைவியே பெரும் பங்காற்றுகிறாள் (மை.அ. கிருட்டிணன், 1978:161). அதனால்தான் பெண் இல்லறத் தலைவி என அழைக்கப்படுகிறாள். கணவன் எவ்வழி, மனைவி அவ்வழி என்பதே தமிழர்களின் இல்லற வாழ்க்கையின் கோட்பாடாகத் திகழ்கிறது (சி. பாலசுப்பிரமணியன், 1979:480). இக்கூற்றுக்குப் பொருத்தமாகச் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கதாப்பாத்திரம் அமைகிறது.

அதேவேளையில், கணிகையர் குலத்தில் பிறப்பின் மாதவிக்கென குடும்பக் கடமையுணர்வு இருப்பதையும், நாம் மறந்துவிடக்கூடாது. தமிழர்கள் போற்றும் விருந்தோம்பலின்வழி மாதரியின் குடும்பக் கடமையுணர்வு ஆகிய மூவரின் இல்லறக் கடமையைத் தொட்டுப் பேசுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**(அ) கண்ணகியின் கடமையுணர்வு**

சிலப்பதிகாரத்தின் தலையாய பாத்திரமான கண்ணகியின் இல்லறக் கடமை உணர்வைப் பற்றி முதலில் காண்போம். பொருளை இழந்து மனைக்குத் திரும்பிய கோவலன் தான் மதுரைக்குச் சென்று பொருள் ஈட்டிப் புதுவாழ்க்கை வாழ நினைத்தான். தன் எண்ணத்தைக் கண்ணகியிடம் கூறினான். ‘கணவனே கண்கண்ட தெய்வம்; அவனது வாக்கே தெய்வ வாக்கு’ என்று நினைத்து வாழ்பவள் கற்புக்கரசி கண்ணகி. கணவன் சொல் பிறழா அக்காரிகை, எதிர் ஒன்றும் பேசாமல், ‘எழுக’ எனக் கோவலன் கட்டளையிட்டதும், மதுரைக்குப் புறப்பட்டாள் (சிலம்பு 1:9, 73–77). குடும்ப உயர்வுக்காகத் தம் சிலம்பில் ஒன்றை வழங்கினாள்.

---

[1]The author is a PhD candidate at The Department of Indian Studies, University of Malaya.
vathi721@gmail.com

*இழந்தப் பொருளை மீண்டும் ஈட்டி கணவனுடன் புதிய வாழ்க்கையைத் தொடங்க விரும்பினாள். இஃது கண்ணகி கோவலன்பால் உள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தினாலும் ஒரு குடும்பத் தலைவியின் பொறுப்பையும் பிரதிபலிக்கின்றது (திருநாவுக்கரசு, 1955:44-45). கண்ணகியின் முற்றிலும் மாறான இக்கொள்கையை கோவலனின் பொறுப்பையும் உணர வைத்தது எனலாம்.*

**பொறுமை**

*ஒரு குடும்பத்தைச் சீர்படுத்தி நல்வழியில் செலுத்துவதற்கு இல்லத்தரசிகளுக்குப் பொறுமைக் குணம் மிக மிக அவசியம். அது கண்ணகியிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. சான்றாக, மதுரையை நோக்கி வரும் பயணத்தில், கண்ணகி பகல் நேர வெப்பத்தின் கடுமையினைத் தாங்கும் வலிமையில்லாதவள் என்பதைக் கோலவன் எடுத்துக்காட்டுகிறான். இதில் கண்ணகியின் மென்மை இயல்பும், தன் துன்பத்தை வெளிப்படுத்திக் கொள்ளாத பொறுமைப் பண்பும் தெரிகிறது (சிலம்பு 1:10, 5-8).*

*இதுநாள் வரை வெளி உலகம் அறியா கண்ணகி, முதன்முறையாக கணவனுடன் புகார் நகரிலிருந்து மதுரை வரை நடந்துசென்றது அவளுக்குப் புது அனுபவமாகும். வெயிலின் கொடுமையால் அவளின் கால்கள் சிவந்து கொப்பளிக்க, மூச்சுத்திணற வழி நடந்தாள் கண்ணகி. ஆனாலும், தன் துயரை ஒருபோதும் கருதியதில்லை. கோவலன் படும் துன்பத்தையே பெரும் துன்பமாக எண்ணி வருந்தினாள் (சிலம்பு 1:10, 5-8). இவ்வாறு கண்ணகி துன்பப்படும் அவசியம் யாது? கற்புடைய கண்ணகி கணவனுடன் இணைந்து மீண்டும் இல்லற வாழ்க்கையை நல்லறமாக்க வேண்டும் என்ற கடமை உணர்வு அவளை அவ்வாறு எண்ணக் காரணியாக அமைந்தது.*

**அறிவுறுத்தல்**

*மாதரி வீட்டில் அடைக்கலம் புகுந்த கண்ணகி, அவள் மகள் ஐயை துணையுடன் உணவு சமைத்துக் கோவலனுக்குப் படைக்கிறாள். அமுதுண்ட கோவலன், கண்ணகிக்குத் தான் இதுநாள் வரை செய்த தீங்கினை எண்ணி வருந்துகிறான் (சிலம்பு 2:16, 68-70). கோவலனின் பொறுப்பற்றத் தன்மையால் அவன் பெற்றோர்கள் அடைந்த துன்பத்தை எடுத்துரைக்கின்றாள், கண்ணகி.*

*அதுமட்டுமின்றி, தான் பிற இல்லத்தரசிகள்போல் இல்லறச் சிறப்பை இழந்ததையும் எடுத்தியம்பித் தன் மனக்குறையைப் புலப்படுத்துகிறாள். இல்லறத்தாருக்குரிய கடமைகளைச் செய்யாததை வெளியில் காட்டிக் கொள்ளாமல், பொறுமையோடு புன்முறுவல் செய்து வாழ்ந்ததையும் கூறுகிறாள். அதற்குச் சான்றாகக் கீழ்க்கண்ட வரிகள் அமைகின்றன.*

**"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்" (சிலம்பு 2:16, 71-74)**

*கோவலனின் பெற்றோர் ஒவ்வொரு முறையும் கண்ணகியைக் காணச் செல்லும்போது அவள் தன் துக்கத்தை மறைத்து அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தாள். கண்ணகியின் பொய்யான புன்முறுவலைக் கண்டு அவர்கள் மனம் வருந்தினர். இவ்வாறு அவர்கள் வருந்தும்படி நீங்கள் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்கள்' என்று கணவனிடம் நயமாக எடுத்துரைத்தாள் (சிலம்பு 2:16, 80). இல்லறத்தில் கணவனின் பொறுப்பு மிக அவசியம் என்பதைக் கோவலனுக்கு மறைமுகமாக அவள் உணர்த்தினாள்.*

*பண்டைத் தமிழர் இல்லற வாழ்வில் விருந்தோம்பலைத் தங்களின் முதன்மைக் கடமையாகக் கொண்டிருந்தனர். அவர்கள் கடன்பட்டாவது விருந்தினர்களை உபசரிப்பார்கள்*

*எனக் கூறுகிறார் பேராசிரியர் டாக்டர் அ. தட்சணாமூர்த்தி அவர்கள் (2005:90-94). இவ்வளவு சிறப்புமிக்க விருந்தோம்பலைத் தன் குடும்ப வாழ்வில் கணவனுடன் சேர்ந்து தான் இல்லறக் கடமையை ஆற்றாததால் குடும்ப வாழ்வு சிறக்காது எனும் உண்மையையும் அறிவுறுத்தினாள், கண்ணகி (ரா. சீனிவாசன், 1998:207).*

*கண்ணகியின் இச்செயலானது இக்கால இல்லத்தரசிகளுக்கு ஓர் உதாரணமாக அமைகின்றது. சிறிய பிரச்சனைகளைப் பெரிதுபடுத்திக் கணவன் மனைவியினரிடையே விவாகரத்துக் கேட்கும் பெண்கள்தான் அதிகம். ஆனால், கோவலன் இவ்வளவு பெரிய துரோகம் செய்தும் அவளின் பொறுமையான குணம் கோவலனை வெட்கி நாணச் செய்தது (தெய்வநாயகம், 1976:294-295). திருவள்ளுவர் தம் குறளில் நமக்குத் தீங்குச் செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான் எனக் கூறுகிறார்.*

**"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்"** (குறள் : 314)

*கோவலனுடைய பொறுப்பற்றத் தன்மையை உணரும் வகையில் எடுத்தியம்பியது கண்ணகியின் இல்லறப் பண்பைக் காட்டுகின்றது. இக்கால மரபிற்கேற்ப ஒரு குடும்பப் பெண் எப்படியெல்லாம் நடக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் சிறந்த இல்லத்தரசியாக வாழ்ந்து காட்டினாள், கண்ணகி.*

*உடலாலும் உள்ளத்தாலும் தன்னைக் காத்து, தன் கணவனின் நலன்களில் கவனம் செலுத்தி, குடும்பத்திற்கு நலம்தரும் புகழைக் காத்து, அறத்தைக் கடைபிடிப்பதில் சோர்வடையாமல் இருப்பவளே பெண். என்றும் நமக்காக எந்தவேளையிலும் நம் மகிழ்விலும் துன்பத்திலும் நோயிலும் நம்முடன் கூடவே நம்மைத் தாங்கி வருபவள் பெண் (மு. கிருஷ்ணன், 2007:37). திருக்குறளும் இதையே கூறுகின்றது.*

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"** (குறள் : 56)

*அத்தகைய பெருமைக்குரிய பெண் கற்புக்கரசியாகத் திகழும் கண்ணகி. அவளின் அளப்பரிய சேவை கணவனின் மனமாற்றத்திற்கு வித்திட்டது மாபெரும் அமைதிப் புரட்சியே!*

*கோல்பெர்க் எனும் உளவியலாளரின் நன்னெறிக் கோட்பாடும் இதனையே உணர்த்துகின்றது. கண்ணகி கோவலனுக்கு மனைவியாக அமைந்தது மட்டுமின்றி, ஒரு தாயாகவும் இருந்து, தன் குடும்ப நலத்திற்காகக் கடமையைச் செய்தாள். கோவலன் தனக்குத் துரோகம் செய்தாலும் அவன்மீது பாசமும் பரிதாபமும் கொண்டு பழகினாள். கண்ணகி போன்ற இத்தகைய நற்குணங்கள் கொண்டவர்களே, சிறந்த இல்லத்தரசிகளாக விளங்க முடியும். ஏனென்றால், அவர்கள்தான் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் நன்றிக்கடன் உடையவர்களாகவும் திகழ்வார்கள் என உளவியலாளர் கோல்பெர்க் கருத்துரைக்கின்றார்* (L. Kohlberg, 1971:23-92).

### (ஆ) மாதவியின் கடமையுணர்வு

*கண்ணகி போல மாதவியும் கடமையுணர்வு மிக்கவள். அவள் கோவலனை முறைப்படித் திருமணம் செய்து குடும்பம் நடத்தாவிட்டாலும், தன் கடமையில் இருந்து அவள் தவறவில்லை.*

*கண்ணகி மற்றும் கோவலன் இறப்பை அறிந்ததும் - மாதவி விலைமகளானாலும், குலமகளாக வாழ விரும்பினாள். கோப்பெருந்தேவி கணவனோடு இறந்ததைப் போல மாதவி கோவலனோடு மடியவில்லை. கண்ணகியைப் போல சில நாள் வாழ்ந்து கணவனோடு*

கலக்கவுமில்லை. மாறாக அவள் துறவியாக வாழ்ந்தாள். அவள் துறவிக்கோலம் பூண்ட காரணமே கோவலனுக்கும் தனக்கும் பிறந்த மகள் மணிமேகலையினால்தான். ஆண்மகனாக இருந்தால் மாதவிக்கு அவ்வளவு பெரிய பொறுப்பு ஏற்பட்டிருக்காது. ஆனால், மாதவிக்குப் பிறந்தது பெண்ணாயிற்றே! பலர் கண்டு அழகில் மயங்கும் அளவிற்கு நல்ல அழகும் வடிவும் கொண்டவள் மணிமேகலை. ஆதலால், அவளை நல்வழியில் வளர்க்கும் மாபெரும் கடமை அவளுக்கு ஏற்பட்டது (வெ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியார், 1947:94–95).

மாதவி தன் தாயான சித்திராபதியிடமும் மகளை ஒப்படைக்க முடியாத சூழ்நிலை. ஏனெனில், சித்திராபதி தன் குல ஒழுக்கப்படி நடப்பதே உலகத்தில் உயர்ந்தது என்று எண்ணுபவள். மாதவி, மகளின் வாழ்க்கையை நெறிப்படுத்தக் கடமைப்பட்டவளானாள். தம்மைப்போல் மணிமேகலையைத் தன் குல ஒழுக்கத்திற்கு இழுப்பதற்காகத் தன் தாய் சித்திராபதி எதையும் துணிந்து செய்யக்கூடியவள். மாதவி கணிகையின் வாழ்வை பழித்தாள். தாயின் வேண்டுகோளையம் மறுத்தாள் (சிலம்பு 3:30, 10–19).

அதுமட்டுமின்றி, அடுத்த இந்திர விழாவிற்கு மாதவி செல்ல மறுத்தாள். தன் மகள் மணிமேகலையையும் அனுப்ப மறுத்தாள். அரசனும் மற்றவரும் அடைந்த துன்பத்தையும் பொருட்படுத்தாமல், சமுதாயத்தை எதிர்த்துப் போராடி வென்றாள் (சிலம்பு 3:30, 29–36). மணிமேகலையை அறநெறிப்படி வாழ வைப்பதற்கும் கண்ணகியின் பெயரை உயர்த்துவதற்கும் கோவலனின் குலம் தூய்மையானது எனக் காட்டுவதற்கும் மாதவி வாழவேண்டியவள் ஆனாள்.

**துணிவு**

மாதவி மணிமேகலைக்குத் திருமணம் முடித்துப் பின் மடிந்திருக்கலாம். ஆனால் மணிமேகலையை மணக்க யாரும் வரவில்லை. உதயகுமரன் எனும் இளவரசன் மணிமேகலையின் அழகில் மயங்கினான் ஒழிய, மணமுடிக்கும் எண்ணம் இல்லை. திருமணம் செய்ய எண்ணியிருப்பின், நேர்முறையில் மாதவியிடம் சென்றிருக்க வேண்டும். தன் பெற்றோரிடம் பேசியிருக்க வேண்டும்.

அரசனின் மகன், பரத்தையர் குலப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? பரத்தைக் குலத்தாளை மணக்க சமுதாயத்தில் எவரும் வரக்கூடிய சூழல் இல்லை. எனவே மாதவி, பரத்தை குலத்தை அடியோடு அழிக்க, தன் கூந்தலைக் கலைந்து துறவியானது மட்டுமின்றி, இல்லற வாழ்வு இல்லையானாலும் நல்லறச் செல்வியென என்றும் நினைக்குமாறு மணிமேகலையின் கூந்தலையும் கலைந்தாள். இளவயதினளான அவளையும் துறவியாக்கிவிட்டாள் (வ.சுப. மாணிக்கம், 1958:59–61).

தன் குலம் மடிந்து, கண்ணகி குலம் விரிய வித்திட்டாள். கடமையை நிறைவேற்றச் சில நாள் வாழ்ந்த கண்ணகியைப் போலவே, மாதவியும், கடமையை நிறைவேற்றப் பலநாள் வாழ்ந்தாள்.

**“கோதைத் தாமம் குழலொடு களைந்து**
**போதித் தானம் புரிந்துஅறம் கொள்ள”** (சிலம்பு 3:27, 106–108)

கோவலனைக் காதலித்து அவனுக்கு மட்டுமே குழந்தையைப் பெற்று, அவனது குலம் தழைக்கவே வாழ்ந்தாள். ஒருவனுக்கு ஒருத்தி எனும் தமிழர் கோட்பாட்டையும் நிலைநிறுத்தினாள், மாதவி (மு. வரதராசன், 1990:50–51).

**அன்பு**

மாதவி தன் மகளை அறநெறியில் செலுத்திக் காக்க நினைத்தாள். அதற்காக மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை எனவும் கணிகையாகிய தன் வயிற்றில்

பிறந்த குற்றம் அவளைச் சாராது எனவும் யாவரும் அறியக் கூறினாள். அரிய தவத்தற்குரிய துறைக்கு மட்டுமே அவள் ஈடுபடுவாளன்றி குற்றமான கணிகைத் தொழிலுக்கு அவள் செல்லமாட்டாள் எனவும் ஆணித்தரமாகக் கூறினாள். மாதவி மணிமேகலையைத் தன்மகள் என்றுகூட சொல்ல விரும்பவில்லை. மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை என்றே சொல்லுகின்றாள்.

**"மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை**
**அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற படாஅள்"** (சிலம்பு 55-57)

மாதவி தன் மகளின்பால் கொண்ட அன்பால் அவளது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தித் தம் கடமையைச் செய்தாள்.

### மாதவியின் தொண்டு

கணவன், மனைவி வாழும் வாழ்க்கையின் பூரணம் அவர்கள் அன்பால் பிறந்த குழந்தை. குழந்தையைப் பெற்றால் மட்டும் போதாது. பிள்ளையை முறையாக வளர்க்கவும் முயற்சிக்க வேண்டும். தன் காலில் நின்று முன்னேறும் விதமாகவும், பொறுப்புள்ள குடிமகனாகவும் குழந்தையை வளர்க்கும் மிகப் பெரிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. காதற் பரத்தையர் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்த மணிமேகலை அன்னையின் அன்புக் கட்டளையாலும், அனுபவ அறிவாலும் துறவு மேற்கொண்டு வாழ்ந்து வந்தாள் (வாசுகி, 1972:180–181).

அன்பு என்றால் தன்னலமற்ற அம்மாவின் அன்பைத்தானே அனைவரும் சொல்வோம். அன்னைதான் குழந்தையின் முதன் ஆசிரியை. ஆகவே மாதவி, தன் மகள் மணிமேகலைக்குத் தாயாக மட்டுமின்றி பௌத்த துறவி ஆசிரியராகவே இருந்து தன் சமூகத்திற்கு மாபெரும் தொண்டையாற்றத் துணை நின்றாள். இல்லற நெறியிலும் துறவு நெறியிலும் வீரங்கொண்டு வாழ்க்கை நடத்தினாள் மாதவி (மா. இராசமாணிக்கனார், 2008:83–84).

எந்த ஒரு தனிமனிதன் பிறர் நலனையும் உரிமைகளையும் செவ்வெனப் பாதுகாத்துச் செயல்படுவானோ அவனே அனைவரின் நலன் கருதி நற்செயல்களுக்குத் தான் பொறுப்பேற்றுக் கொள்வான் என உளவியலாளர் கோல்பெர்க் தமது ஆய்வின்வழி கூறுகிறார் (L. Kohlberg, 1975:47-53). உளவியலாளர் கூறுவதுபோல் மாதவி தன் மகளுக்காகப் பரத்தை வாழ்க்கையை தியாகம் செய்தது மாபெரும் செயலாகும். ஒரு தாய் தன் குழந்தைக்காக ஆற்றவேண்டிய கடமையை செவ்வனேச் செய்தாள். அவளது வாழ்க்கையைப் பௌத்த துறவியாக மாற்றியது மட்டுமின்றி, மகள் மணிமேகலையையும் துறவியாக்கியது, மகளின் நல்வாழ்வை எண்ணி ஆற்ற வேண்டிய கடமையையும் தாண்டி ஒரு படி கூடவே தியாகம் செய்துள்ளாள்.

### (இ) மாதரியின் கடமையுணர்வு

சிலப்பதிகாரத்தில் மற்றுமொரு இல்லறக் கடமையுணர்வு மிக்க கதாப்பாத்திரத்தை நமக்கு அறிமுகம் செய்துள்ளார் இளங்கோவடிகள். அவர்தான் மாதரி எனும் ஆயர்குலப் பெண். இழந்தப் பொருளை ஈட்டும் எண்ணத்துடன் கவுந்தி அடிகளாரின் துணையுடன் மதுரையை வந்தடைகின்றனர், கோவலனும் கண்ணகியும். அங்கு ஆயல்குலத்து முதுமகளாக விளங்கும் மாதரியின் மாண்பை அறிகின்றார் (சிலம்பு 2:15, 122–124). பின்பு, கவுந்தியடிகளார் அறிவுறுத்தியபடி, கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலப் பொருளாகப் பெறுகின்றாள் மாதரி. அவர்களைத் தன் மனைக்கு அழைத்துச் சென்றாள். அவ்வாறு அடைக்கலமாகப் பெற்ற கண்ணகியைச் சிறப்பாக உபசரித்தாள். ஆயச்சியரின் இருப்பிடமான கட்டுவேலி சூழ்ந்த சேரியிலேயே கோவலனையும் கண்ணகியையும் தங்கச் செய்யவில்லை. மாறாக, அழகமைந்த மரப்பந்தல் செறிந்ததும், பாதுகாப்பும் உடைய

*செம்மண் பூசிய ஓர் அழகான புதிய மனையிலே அவர்களைத் தங்கி இருக்கச் செய்கிறாள் (சிலம்பு 2, 16:1-4). ஆயர் மகளிர் அனைவரும் ஒன்றுசேர்ந்து கண்ணகியைப் புதுநீரால் குளிக்க வைத்தனர். அதன்பிறகு மாதரியின் மகளான ஐயை என்பவளைக் கண்ணகிக்குத் துணையாகவும் இருக்கச் செய்து உணவு சமைக்க புது பாத்திரங்களையும் வழங்கினாள் (சிலம்பு 2:16, 7-15).*

*மாதரி வீட்டில் பலவகைப் பாத்திரங்கள் இருந்தாலும் அவற்றுள் மாதரி பயன்படுத்தாத புதிய உயர்வகைப் பாத்திரங்களைக் கண்ணகிக்கு அளித்தாள். அதுமட்டுமின்றி, கண் ணகி சமைப்பதற்கு உயர்வகைச் சாலி, அரிசி, பால், நெய் மற்றும் காய்கறிகளும் வழங்கினாள். பொதுவாக வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு சமைத்து உணவு படைத்தல் என்பது தமிழர்களின் பண்பாகும். இருப்பினும், கோவலன் சாவக நோன்பி. ஆதலால் கண்ணகியின் வேண்டுகோளுக்கு இணங்கி, மாதிரி கண்ணகியையே தன் கணவனுக்கு உணவு சமைத்துப் படைக்கச் சம்மதித்தாள். மாதரியின் உயர்ந்த விருந்தோம்பல் பண்பை நமக்கு உணர்த்துகின்றது, சிலப்பதிகாரம்.*

**"சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்**
**நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்**
**அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்**
**நெடியாது அளிமின் நீர்எனக் கூற" (சிலம்பு 2:16, 18-21)**

*மாதரியின் கடமை அத்துடன் நின்றுவிடவில்லை. கண்ணகியைத் தன் மருமகளாகவும் கோவலனை மகனாகவும், தன் மகள் ஐயை நாத்தனாள் என்றும் உறவு முறைகொண்டாடினாள். இவ்விதம் உறவுமுறை கொண்டாடுவது நாகரிகமான முறை என சங்ககால மக்கள் கருதுகின்றனர் (சுந்தரசண்முகனார், 1992:313). நமக்கு முன் அனுபவம் இல்லாதவரோடு நாம் புதிய உறவு முறை கொண்டாடுவது இக்கால நடைமுறைக்கு அரிதாகும். ஆனால், சங்க காலத்தில் விருந்தோம்பலைத் தங்கள் கடமையாகக் கொண்டிருந்த மக்கள்தம் வீட்டிற்கு வந்தவரிடமும் உறவுமுறை கொண்டாடுதல் மிக சாதாரணமான விசயமாகும் (மு.பி. பாலசுப்பிரமணியம், 1999:79). இல்லத்தரசிகளின் பண்பட்ட கடமையுணர்வும் விருந்தோம்பல் பண்பையும் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது சிலப்பதிகாரம் (டே. மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா, 2007:33-36). வள்ளுவரும் இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகத்தான் எனக் கூறுகிறார்.*

**"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு" (குறள் : 81)**

*சங்க கால மக்கள் நள்ளிரவில் விருந்தினர் வீட்டிற்கு வந்தாலும் முகமலர்ச்சியோடு அவர்களை வரவேற்று ஆதரிப்பதை அவர்களின் கடமையாகக் கொண்டுள்ளனர் (ஸ்ரீவித்யா, 2007:166-167). விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்பதை நற்றிணை பாடல் இவ்வாறு உணர்த்துகிறது.*

**"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (நற்றிணை : 142)**

*ஆகவே, மாதரி விருந்தோம்பலைத் தினசரிக் கடமையாகக் கொண்டு இல்லறம் நடத்தினாள் என்பதற்கு சிலப்பதிகாரம் நற்சான்றாக அமைகின்றது.*

*வள்ளுவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளைத் தமது குறள்வழி இல்லறமே ஏற்றமென செப்புகிறார். உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான் என்பது அவரது கருத்து.*

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் : 50)**

மனிதனிடம் அன்பு இருந்தால் சுயமாகவே அறச் செயல் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், தன்னாலே உண்டாகும். சுற்றத்தாரிடம் தமக்குத் தோன்றும் உள்ள நெகிழ்ச்சி என்பது அன்பைக் குறிக்கின்றது. முன்பின் அறியாதவர்களின் துன்பத்தைக் கண்டு இரக்கங் கொள்வதென்பது அவர்களிடம் ஏற்படும் அருள் எனக் கூறப்படும் (வாசுகி, 1977:446). மாதரிக்கு முன்பின் அறியாத கண்ணகியிடமும் கோவலனிடமும் ஏற்பட்டது அன்பும் அருட்பண்பும்தான். ஏனெனில், இல்லற நெறிக்குத் துணைநிற்பவள் மனைவியாதலால் இல்லறக் கடமைகளில் அதிக அக்கறையும் உடையவளும் அவளே (மு. கிருஷ்ணன், 2007:92–93). ஆதலால், கணவன் உடல் இல்லாவிட்டாலும் மாதரி தன் இல்லறக் கடமையைச் செவ்வென ஆற்றினாள்.

ஒரு மனிதன் தனித்து வாழாது பிறரைச் சார்ந்தே வாழ்கின்றான். அவன் சுற்றத்தாரிடம் உறவுகொண்டு ஒரு சமுதாயமாக வாழ்கின்றான். அதில் ஏற்றத்தாழ்வு மற்றும் இன வேற்றுமைக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை. குடும்பத்தில் பெரும்பாலும் பெண்களே சுற்றத்தாரிடம் உறவை வளப்படுத்த ஏதுவானவர்கள் (புலியூர் கேசிகன், 1963:148–149). சிலப்பதிகாரத்தில் மாதரி, கண்ணகி கோவலன் தம்பதியினரை ஆயர்களும் ஆய்ச்சியர்களும் புடைசூழ தன் மனைக்கு அழைத்து வந்தாள். பின், அவர்களுடன் சேர்ந்து குரவைக் கூத்து ஆடியதன் வழியும் மாதரி சுற்றத்தாரிடம் அன்புடன் பழகியதை அறிய முடிகிறது.

கோல்பெர்க்கின் நன்னெறி கோட்பாடு, ஒருவர் எதிர்ப்பார்ப்பிற்கேற்ப பிறருக்கு நன்மை செய்வதைப் பெரும் கடமையாகக் கொள்வர் எனக் கூறுகிறது. உளவியலாளர் கோல்பெர்க் தன் ஆய்வில், நன்னெறிப் பண்பை உடைய ஒருவர் பிறர் நலம் கருதுவர் என்றும் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும் எனும் நல்லெண்ணம் கொண்டவர் என்றும் கூறுகிறார். மாதரி தன் மனைக்கு வந்த அறிமுகமில்லாத கோவலன் கண்ணகியை நன்கு உபசரித்ததன் மூலம் அவளின் உதவும் நல்லெண்ணத்தை உணர முடிகின்றது.

அத்துடன், பாரம்பரிய நம்பிக்கைளைப் போற்றுபவராகவும், பிறர் நலனில அக்கறை கொண்டவராகவும் வளமான வாழ்க்கை நடத்தப் பேருதவியும் புரிவர் எனக் கருத்துரைக்கின்றார் உளவியலாளர் (L. Kohlberg, 1975:47-53). சிலப்பதிகாரம் மாதரியின் கதாப்பாத்திரம்வழி விருந்தோம்பல் பண்பை மேலோங்கச் செய்கிறது. மாதரி உயிரிலும் மேலாகத் தொன்றுதொட்டாக விளங்கும் தமிழர்களின் பாரம்பரியத்தைப் பராமரித்தவள் என்பதைச் சிலப்பதிகாரம் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றது.

## முடிவுரை

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் எனக் கூறப்படுவது ஒரு குடும்பம், கணவன், மனைவி மற்றும் குழந்தைகளுடன் அன்போடும் புரிந்துணர்வோடும் நல்ல குடும்பச் சூழலில் வாழ்வதாகும். நல்ல குடும்பத்தில் நன்மக்கள் பிறப்பார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்குக் குடும்ப அமைதி இன்றியமையாததாகும். ஒரு குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றால், சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் ஆகிய மூன்றையும் குடும்பத் தலைவன், தலைவி இருவருமே கடைபிடிக்க வேண்டும். இருப்பினும், இல்லறம் சிறக்க இல்லத்தரசியாக விளங்கும் குடும்பத் தலைவியே காரணமாகிறாள். இல்லறமே நல்லறம். ஆகவே, இல்லத்தரசிகளின் விருந்தோம்பல் பண்பும் குடும்பத்தை நடத்திச் செல்லும் பாங்கும் சமூகத்தில் சிறந்து வாழ்வதற்குத் துணைபுரிகின்றது.

## Bibliography


Balasubramaniam, M.,P. (1999). Ilakkiya Putaiyal. Chennai: Pumbugar Publication.

Balasubramanian, C. (1979). 'IIiya Illa_am'. Âyvuk Kôvai. (Vol 1). Annamalai Nagar: Sivagami Printers.

Kohlberg,L. (1971). Stages of Moral Development as a Basis for Moral Education. New York: Harper & Row.

Krishnan, M. (2007). Vâ;viyal Kû_uka7-Va7arnilai Nôkku PaGpâmmu Kû_uka7'. Vâ;viyal PayaGam. Chennai Kalainyan Publication.

Krishnan, M.,A. (1978). Periya PurâGa Illa_ap PeGmir. Âyvuk Kôvai. Annamalai Nagar: Sivagamy Printers.

Manikkam, Va.,Suba. (1958). Irammaik KâppiyaEka7. Karaikudi: Selvi Printers.

Mary Arokya Kliters Kala. (2007). "Illa_a MâGpu", Vâ;viyal PayaGam. Chennai: Kalainyan Publication.

Puliyur Kesigan. (1963). Cilappatikâra Camutâyam. Chennai: Segar Publication..

Rasamanikanar, M. (2008). Tami; PaGpâmmu Varalâ_u. Chennai: Kavya Kavya Publication.

Srinivasan, R. (1998). Cilappatikâram Mûlamum Ti_aIâyvum. Chennai: Aniyagam.

Srivitya. (2007). 'Nîti IlakkiyaEka7il Uyarvâ;va_am', Vâ;viyal UGmaika7. Chennai: Kalainyan Publication.

Subramaniya Acharya, V.,S. (1947). Cilappatikâra Ârâycci. Chennai: Segar Publication.

Sunthara Shanmuganar. (1992). Cilampô Cilampu. Chennai: Vanathi Publication.

Thatchinamurthi, A. (2005). Tami;ar Nakarîkamum PaGpâmum. Chennai: Yaz Publication.

Theivanayagam, K. (1976). KaGGakiyâr KaimpeGGâ?, Âyvuk Kôvai. Annamalai Nagar: Sivagami Printers.

Thirunavukarasu. (1955). Cilappatikâra Kâmcika7. Madurai: Star Publication.

Varatharasan, Mu. (1990). Mâtavi. Chennai: Pari Publication.

Vasugi. (1972). 'MaGimçkalaiyiI Kâtal Ve__i'. Âyvuk Kôvai. (Vol 1). Annamalai Nagar: Sivagami Printers.